தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆவின் நிலைப்படுத்தப்பட்ட பால் சாக்லெட் நிற பாக்கெட்டில் கிடைக்கும்

**மதுரை:** பச்சை நிற பாக்கெட்டுகளில் விற்பனை செய்யப்பட்ட ஆவின் நிலைப்படுத்தப்பட்ட பால், தாற்காலிகமாக சாக்லெட் நிற பாக்கெட்டுகளில் விற்பனை செய்ய இருப்பதாக ஆவின் நிர்வாகம் அறிவித்துள்ளது.
மதுரை ஆவின் நிறுவனத்தில் பசும்பால் (ஆரஞ்சு பாக்கெட்), நிலைப்படுத்தப்பட்ட பால் (பச்சை பாக்கெட்), நிறைகொழுப்பு பால் (சாக்லெட் நிற பாக்கெட்) என மூன்று வகைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில் நிலைப்படுத்தப்பட்ட பால் பாக்கெட்டுகளின் உற்பத்தி குறைக்கப்பட்டு, குறைந்த எண்ணிக்கையிலேயே விற்பனைக்கு அனுப்பப்பட்டது. மேலும், நிலைப்படுத்தப்பட்ட பால் பாக்கெட்டுகளுக்கு மாதாந்திர அட்டை வழங்குவதும் நிறுத்தப்பட்டது. தேவைக்கேற்ப நிலைப்படுத்தப்பட்ட பால் தட்டுப்பாடின்றி விற்பனைக்கு அனுப்புமாறு வாடிக்கையாளர்கள் தரப்பில் ஆவின் நிர்வாகத்திடம் கோரப்பட்டது. இந்நிலையில், நிலைப்படுத்தப்பட்ட பால் பாக்கெட்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த ஆவின் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக மதுரை ஆவின் பொதுமேலாளர் எஸ்.கிறிஸ்டி வெளியிட்டுள்ள செய்தி: மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பொதுமக்களுக்கு மூன்று வகைகளில் பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்து வருகிறது. இதில் 4.5 சதவீதம் கொழுப்புச் சத்தும், 8.5 சதவீதம் இதர சத்துகளும் உள்ள நிலைப்படுத்தப்பட்ட பால் பச்சை நிற பாக்கெட்டுகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் அதிகபட்ச சில்லறை விற்பனை விலை 500 மிலி

ரூ.16.

நிர்வாகக் காரணங்களுக்காக நிலைப்படுத்தப்பட்ட பால், பச்சை நிற பாக்கெட்டுக்குப் பதிலாக சாக்லெட் நிற ஆவின் கோல்டு என அச்சடிக்கப்பட்ட பாக்கெட்டுகளில் கிடைக்கும். மறு அறிவிப்பு வரும் வரை ஆவின் நிலைப்படுத்திய பாலை, சாக்லெட் நிற பைகளில் 500 மிலி-க்கு ரூ.16 விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சாக்லெட் நிற ஆவின் கோல்டு பாக்கெட் ரூ.17 என அச்சிடப்பட்டுள்ளதைக் கண்டு ஏமாறாமல், சரியான விலையில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## கண்மாய்ப் பாசனத்தை தனி மண்டலமாகப் பிரித்து விவசாய சங்கத் தேர்தல் நடத்த கோரிக்கை

**பழனி:** பழனி வையாபுரிக் கண்மாய் பாசனத்தை தனி மண்டலமாகப் பிரித்தும், புதிய வாக்காளர் பட்டியலை வெளியிட்டும் தேர்தல் நடத்த, மாவட்ட ஆட்சியருக்கு பழனி கிராம விவசாய சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது குறித்து, பழனி கிராமம் வையாபுரிக் கண்மாய் பாசனம் கரைப்பத்து புரவு விவசாயிகள் நல முன்னேற்ற சங்கத் தலைவர் கருப்பையா, மாவட்ட ஆட்சியருக்கு விடுத்துள்ள கோரிக்கை:

பழனி வரதமா நதியின் நேரடி நீர்ப் பாசனத்தின் கீழ்வரும் பழனி வையாபுரிக் கண்மாய் மூலம் சுமார் 754 ஹெக்டேர் நிலம் இருபோக விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி சங்கம் மூலம் பாசனம் தொடர்பான பிரச்னைக்கு, அரசு சட்ட நடவடிக்கை, மாவட்ட ஆட்சியர், உரிமையியல் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் வரை சென்று தீர்வு கண்டுள்ளோம். வையாபுரி கண்மாய் நிரம்பி

செல்லும் உபரி நீரால் சிறுநாயக்கன்குளம் நிரம்புகிறது. இதன் பரப்பளவு 137 ஹெக்டேர் மட்டுமே. இந்த இரு குளங்களால் பாசன வசதி பெறுவோரை இணைத்து தேர்தல் நடத்தினால், இரு போக விவசாயம் செய்யும் எங்கள் சங்கத்தின் அடிப்படை நலன்கள் பெரிதும் பாதிக்கப்படும்.

எனவே, வையாபுரி கண்மாய், சிறுநாயக்கன்குளம் கண்மாய் பாசனத்தை பயன்படுத்துவோரை தனித்தனி மண்டலமாகப் பிரித்து, புதிய வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பின் தேர்தல் நடத்துமாறு கோரிக்கை விடுக்கிறோம்.

தற்போது அரசு வெளியிட்டுள்ள விவசாய சங்க வாக்காளர் பட்டியலில் பெரும்பாலான நில உரிமையாளர்கள் பெயர் விடுபட்டுள்ளது.

பெயர் மாற்றம், தந்தை பெயர், சர்வே எண், விஸ்தீரணங்கள் மாறியுள்ளன. இந்த வாக்காளர் பட்டியல் மூலம் தேர்தல் நடத்தினால் பலரும் வாக்களிக்க இயலாது.

எனவே, தற்போதைய உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கி, புதிய வரைவு வாக்காளர் பட்டியல் தயாரித்து பின்னர் சரிபார்த்து தேர்தல் நடத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## <u>முல்லைப் பெரியாறு அணையில் திறக்கப்படும் தண்ணீரால் வைகை அணையின் நீர்மட்டம் உயர்வு</u>

**ஆண்டிபட்டி:**முல்லைப் பெரியாறு அணையிலிருந்து அதிக அளவு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், கடந்த 2 நாள்களாக வைகை அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

பருவமழை இல்லாததால், வைகை அணையின் நீர் மட்டம் குறைந்து, தேனி,திண்டுக்கல், மதுரை மாவட்டத்துக்கு விநியோகிக்கப்படும் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவி வந்தது. இந்நிலையில், கடந்த 4 நாள்களாக முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது.

எனவே, வைகை அணைக்கு கடந்த திங்கள்கிழமை முதல் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு ஏற்படவிருந்த குடிநீர் பிரச்னை தாற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது.

வியாழக்கிழமை மாலை அணைகளின் நிலவரம்:

முல்லைப் பெரியாறு: நீர் மட்டம் - 117.60 அடி (152), நீர் வரத்து - 2,385 கன அடி, நீர் வெளியேற்றம் - 933 கன அடி.

வைகை அணை: நீர் மட்டம் - 26.05 அடி (71) நீர் வரத்து - 214 கன அடி, நீர் வெளியேற்றம் - 40 கன அடி.

மழைப் பொழிவு: பெரியாறு - 3 மி.மீ.

**போடியில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றம்**

**போடி:** போடியில் லயன்ஸ் கிளப் சார்பில், சீமைக் கருவேல ம ரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.
போடி அருகே கோடாங்கிபட்டி, ஒத்தவீடு கிராமங்களில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, லயன்ஸ் கிளப் தலைவர் கே.எஸ்.என். சிவமணி தலைமை வகித்தார். செயலர் டி. குணசேகரன், பொருளாளர் எல். மகேஸ்வரன், துணைச் செயலர் சி. பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜே.சி.பி. இயந்திரம் மூலம் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட்டன. சீமைக் கருவேல மரங்கள் நிலத்தடி நீா்மட்டத்தை உறிஞ்சுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே, அவற்றை ஆரம்பத்திலேயே பிடுங்கி அகற்ற வேண்டும் என பொதுமக்களுக்கு வலியுறுத்தப்பட்டது.

இதேபோல், தேனி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து, போடி

லயன்ஸ் கிளப் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில், 273 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது. இவர்களில் 45 பேர் இலவச கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அறுவைச் சிகிச்சை செய்தவர்களுக்கு இலவச ஐ.ஓ.எல். லென்ஸ் பொருத்தப்பட்டது. நிகழ்ச்சியில், முன்னாள் செயலர் ஏ. பாலாஜி, அய்யனார் ஆகியோர் பங்கேற்றனர்.

## பெரியாறு அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு: 3 ஜெனரேட்டர்களில் மின்சாரம் உற்பத்தி

**கம்பம்:**முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, புதன்கிழமை லோயர்-கேம்ப் பெரியாறு மின் உற்பத்தி நிலையத்தில் கூடுதல் மின்சார உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்புப் பகுதியில், கடந்த ஒரு வாரமாக தென்மேற்குப் பருவமழை பெய்து வருகிறது. இதனால், முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டம், கடந்த திங்கள்கிழமை 114.80 அடியாக இருந்தது. புதன்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 117 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 2,462 கன அடியிலிருந்து 3,008 கன அடியாக அதிகரித்துளளது.

அணையிலிருந்து குடிநீருக்கும், பாசனத்துக்கும் திறந்துவிடப்படும் தண்ணீர் 600 கன அடியிலிருந்து 889 கன அடியாக உள்ளது. அணையின் மொத்த நீர் இருப்பு 1,820 மில்லியன் கன அடி.

தற்போது, அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால், லோயர் கேம்ப் பெரியாறு நீர் மின்சார உற்பத்தி நிலையத்தில், திங்கள்கிழமை வரை ஒரு ராட்சத குழாயிலிருந்து ஒரு ஜெனரேட்டர் மூலம் 36 மெகா வாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

இது, செவ்வாய்க்கிழமை முதல் இரண்டு ஜெனரேட்டர்கள் மூலம் தலா 27 மெகா வாட் வீதம் 54 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

புதன்கிழமை முதல் அணையிலிருந்து 889 கன அடி தண்ணீர் திறக்கப்படுவதால், 3 ராட்சத குழாய்கள் மூலம் 3 ஜெனரேட்டர்கள் இயக்கப்பட்டு, மொத்தம் 79 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியை எட்டியுள்ளது.

## நாமக்கல் விற்பனை நிலையத்தில் ரூ.18 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**நாமக்கல்:** நாமக்கல் கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 800 பருத்தி மூட்டைகள் ரூ.18 லட்சத்துக்கு ஏலம் போயின. நாமக்கல், சேலம், கரூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் பருத்தி அறுவடை பருவம் தொடங்கியிருப்பதால் இந்த விற்பனை நிலைய ஏலத்துக்கு வரும் பருத்தி மூட்டைகளின் அளவும் கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 800 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவந்தனர்.

இதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,850 முதல் ரூ.5,360 வரையும், சுரபி ரூ.6,400 முதல் ரூ.7,407 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.18 லட்சத்துக்கு விற்பனையாகின. கடந்த வாரம் (ஜூலை 10) 900 பருத்தி மூட்டைகள் வந்தன.

இதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,800 முதல் ரூ.5,300 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.5,800 முதல் ரூ.6,300 வரையும், சுரபி ரூ.6,700 முதல் ரூ.7,295 வரையும் என மொத்தம் ரூ.20 லட்சத்துக்கு ஏலம் போயின.

அறுவடை பருவமாக இருப்பதால் வரும் வாரங்களில் ஏலத்துக்கு தொடர்ந்து பருத்தி வரத்து அதிகரிக்கும் என்று கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## தேசிய வேளாண்மை மேம்பாட்டு திட்டப் பணிகள் ஆய்வு

**ஓமலூர்:**

காடையாம்பட்டி பகுதியில் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை வேளாண்மைத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர்.

ஓமலூர் அருகேயுள்ள காடையாம்பட்டி வட்டாரத்தில் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துவரையின் மகசூலை இரட்டிப்பாக்கும் வகையில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.7,500 வீதம் மானியத்தில் துவரை நாற்று நடவு செயல்விளக்கத்திடல் அமைக்க விதைகள், உயிர் உரங்கள், உயிரியல் பூஞ்சாண் கொல்லிகள், பாலித்தீன் பைகள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் வாயிலாக துவரை நாற்றங்கால் அமைக்கப்பட்ட இடங்களை காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.நாசர் தலைமையிலான குழுவினர் நேரில் ஆய்வு செய்தனர்.

துவரை நாற்று நடவு தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள் எழுப்பிய சந்தேகங்கள் குறித்து இந்தக் குழுவினர் விளக்கமளித்தனர்.

நாற்றங்கால் பராமரிப்பு குறித்து துணை வேளாண்மை அலுவலர் பு.ரவிக்குமார் எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர்கள் சி.ஞானஜோதி முருகன், ம .நடராஜன், ப .தண்டபாணி, ரா.முத்துசாமி, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் க .ராஜேந்திரன் ஆகியோர் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆய்வு

**அரியலூர்:**

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் எ . சரவணவேல்ராஜ் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் 2014-15-ம் ஆண்டுக்கு அரியலூர் மாவட்டத்தில் 300 எக்டேர் பரப்பில் மா, எலுமிச்சை, பப்பாளி, முந்திரி,

மலர்கள், மிளகாய், மஞ்சள், கொத்தமல்லி போன்ற பயிர்களில் புதிதாக தோட்டம் அமைப்பதற்கும், 1000 ச .மீ., பரப்பில் நிழல் வலை அமைப்பதற்கும், 60 எக்டேர் பரப்பில் ஒருங்கிணைந்த சத்துகள் பராமரிப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு மேற்கொள்வதற்கும், 7 இடங்களில் மண்புழு உரப்படுக்கை அமைப்பதற்கும் ரூ. 114 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் பழமரக்கன்றுகள் மற்றும் இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 4 எக்டேர் வரையில் மானியம் வழங்கப்படும். தேசிய தோட்டக்கலை இயக்கத்தில் 2013-14-ம் ஆண்டில் ஆண்டிமடம் வட்டாரத்தில் சிலுவைச்சேரி கிராமத்தில் சிறிய நாற்றங்கால் அமைக்கப்பட்ட நா. பாலசுப்பிரமணியன் என்பவரது வயல் மற்றும் நிழல்வலை அமைக்கப்பட்ட வள்ளி என்பவரின் வயல் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார். மேலும் 2014-15-ம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் துல்லிய பண்ணையம், நிரந்தர கல்தூண் அமைத்து பந்தல் சாகுபடி செய்தல், மரத்தூண் அமைத்து பந்தல் காய்கறிகள் சாகுபடி செய்தல் போன்ற திட்டங்களுக்கு ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும் மானாவாரி பகுதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தோட்டக்கலை சார்ந்த ப ண்ணை, பசுமை குடில், நிரந்தர மண் புழு உரத்தொட்டி, மண்புழு உரப்படுக்கை ஆகியவை அமைத்தல் போன்ற திட்டங்களுக்கு ரூ. 38.42 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2013-14-ம் ஆண்டு ஆண்டிமடம் வட்டாரத்தில் ரெட்டித்தத்தூர் கிராமத்தில் அமைக்கப்பட்ட துல்லிய பண்ணையம் அமைக்கப்பட்ட சொக்கலிங்கம் என்பவரது வயலை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்.

இந்தஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (பொ) சுப்பையா, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 2.40 கோடியில் பணிகள்**

**புதுக்கோட்டை:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 2.40 கோடியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் வேளாண் துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்த பிறகு வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் கூறியது:

மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை, திருவரங்குளம், கறம்பக்குடி, அரிமளம், அன்னவாசல் ஆகிய 6 வட்டாரங்களில் உள்ள 80 நீர்வடிப் பகுதிகளில் சுமார் 47,260 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாசுப்பட்ட இயற்கை வளங்களான மண், பசுமைச் சூழல், நீர் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்தி சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தில் 1 ஹெக்டேர் நிலத்தை மேம்படுத்த ரூ. 12 ஆயிரம் வழங்கப்படுகிறது. அதில், மத்திய அரசின் பங்கு 90%. மாநில அரசின் பங்கு 10%. திட்ட காலம் 7 ஆண்டுகள்.

இத்திட்டத்தின் நுழைவுக் கட்டப் பணிகளுக்கு 4% நிதியும், இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளுக்கு 56% நிதியும், உற்பத்தி முறைகள் குறுந்தொழில்களுக்கு 10% நிதியும், நிலமற்ற விவசாய கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த 9% நிதியும், சமுதாய அமைப்பினருக்கான பயிற்சிகளுக்கு 5% நிதியும், நிர்வாகம், அதன் தொடர்புடைய இதரப் பணிகளுக்கு 16% நிதியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழாத்தூர், கட்ராம்பட்டி, சூரன்விடுதி, கூழையன்காடு, தட்சிணாபுரம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில்

கைக்குலான்வயல், மிரட்டுநிலை ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. நீர்வள நிலவளத் திட்டத்தில் 25 மாதிரி கிராமங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த கிராமங்களில் வேளாண் துறை தொடர்பான 8 துறைகளுடன் இணைந்து பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒற்றைச் சாளர தகவல் மையம் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பத் திட்டங்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 2.40 கோடியில் திருந்திய நெல் சாகுபடி முறைகள் பயறு வகைகள், தீவிர சிறு தானிய உற்பத்தித் திட்டம், அதிக விளைச்சல் பெற துல்லிய பண்ணையம் அமைத்தல் ஆகிய பணிகள் ஆட்சியர் செ. மனோகரனின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார் அவர்.

ஆய்வின் போது, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், துணை இயக்குநர்கள் சதானந்தம், ஜெயக்குமார், உதவி இயக்குநர் சிவக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## <u>தீவனப்புல் தயாரிப்பு செயல் விளக்க முகாம்</u>

**பெரம்பலூர்:** பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகே உள்ள பிள்ளையார் பாளையம் கிராமத்தில் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், கறவை மாடுகளுக்கு ஊறுகாய் புல் தயாரிக்கும் செயல் விளக்க முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.
இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற ரிலையன்ஸ் நிறுவன பொது மேலாளர் ஏ . தாயுமானவன், ரிலையன்ஸ் பாலிதீன் பைகள் மூலம் எளிமையாக ஊறுகாய்ப் புல் தயாரிப்பது எவ்வாறு என்பது குறித்து, விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தார். ரோவர் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்) பி. ஆதிலட்சுமி, வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் சு.

வசந்தகுமார் ஆகியோர் ஊறுகாய்ப் புல்லின் பயன்கள் குறித்து விளக்க உரையாற்றினர். இதில், பிள்ளையார்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தோட்டக்கலைத்துறை வளர்ச்சி பணிகள் அரியலூர் மாவட்ட கலெக்டர் நேரில் ஆய்வு**

**அரியலூர்:** வேளாண்மை மற்றும் தோட்டக்கலை வளர்ச்சி பணிகள் குறித்து, அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டார். நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்குவது, விதை சேமித்து வைப்பதற்கான உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், தா.பழூர் பகுதி விவசாயிகள் பயனடையும் வகையில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ், 25 லட்சம் ரூபாய் மதிப்பில், அரியலூர் மாவட்டம், ஜெ.தத்தனூரில் கட்டடப்பட்டு வரும், ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட, விதை சுத்திகரிப்பு நிலைய கிடங்கு கட்டிடத்தை, கலெ க்டர் சரவண வேல்ராஜ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், முந்திரி பரப்பு அதிகரிப்பு மற்றும் சொட்டு நீர் பாசனத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், அரசு மானியத்துடன், ஆண்டிமடம் அருகே, பட்டனங்குறிச்சி கிராமத்தில்

ரவிச்சந்திரன் என்பவரது வயலில் அமைக்கப்பட்ட சொட்டுநீர் பாசன திட்டத்தை, அரியலூர் கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், சிலுவைச்சேரி கிராமத்தில், பாலசுப்ரமணியன் மற்றும் வள்ளி உள்ளிட்டோர் வயல்களில் நிழல் வலைகளுடன் அமைக்கப்பட்டுள்ள நர்ஸரி கார்டன்களையும், கலெக்டர் ஆய்வுசெய்தார். இந்த ஆய்வுகளின் போது, அரியலூர் வேளாண்மை துறை இணை இயக்குநர் குணசேகரன் உடனிருந்தனர்.

**வேலிகாத்தான் மரம் ரூ.14 லட்சத்திற்கு ஏலம்**

**வாலாஜாபாத்:** தண்டலம் ஊராட்சியில், வேலிகாத்தான் மரங்கள் பொது ஏலத்தின் மூலமாக, 14.10 லட்சம் ரூபாய் ஊராட்சி நிர்வாகத்திற்கு வருவாய் கிடைத்து உள்ளது.

காஞ்சிபுரம் அடுத்த, தண்டலம் ஊராட்சியில் மூன்று ஆண்டுகள் முதிர்ந்த வேலிகாத்தான் மரங்கள் உள்ளன. இந்த மரங்களை கிராமவாசிகளின் முன்னிலையில், நேற்று ஏலம் விடப்படும் என , ஊராட்சி நிர்வாகம் கடந்த மாதம் அறிவித்திருந்தது.அதன்படி, நேற்று காலை 11:00 மணி அளவில், ஊராட்சி தலைவர் அலுவலக கட்டடம் அருகே, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குமரகுரு மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் முன்னிலையில், வேலிகாத்தான் மரங்கள் ஏலம் விடப்பட்டன. இந்த ஏலத்தில் 14.10 லட்சம் ரூபாய்க்கு, வேலிகாத்தான் மரங்கள் ஏலம் விடப்பட்டன.

**வயல்களில் தண்ணீர் தேக்கம்; "நிரம்பிய' மனங்களுடன் விவசாயிகள்**

**கூடலூர் :** கூடலூரில் தொடரும் பருவமழையால், நெல் வயல்களில் தண்ணீர் வரத்து அதிகரித்து, விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கூடலூர் பகுதியில், இந்த ஆண்டு ஜூன் மாதம் பருவமழை பொய்துவிட்டது. இதனால், வயல் வெளிகள் தண்ணீர் இன்றி வறண்டு காணப்பட்டன. இதனால், கடந்த மாதம் விதை நெல் விதைக்க முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். ஆனால், இம்மாதம் துவக்கம் முதல் மழைபெய்து வருகிறது. இதனை தொடர்ந்து, விவசாயிகள் விதை நெல் பயிரிட்டு வருகின்றனர். வயல்களில் த ண்ணீர் தேங்கி, ஏரி போன்று காட்சி அளிக்கிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயி கோபால் கூறுகையில், ""கடந்த ஆண்டு பருவமழை பொய்த்த காரணத்தால், கூடலூர் சுற்றுப்புற பகுதிகளில் நெல் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. நடப்பாண்டில், மழை பெய்த காரணத்தினால், நாற்று நடும் பணிக்கு இங்குள்ள விவசாயிகள் தயாராகி வருகிறோம். இன்னும் ஒரு சில நாட்களில் பணி துவங்கும்" என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**அத்தியூர் வாரச்சந்தையில் வியாபாரம் மந்தம்**

**ரிஷிவந்தியம்:** அத்தியூர் வாரச்சந்தையில், காய்கறி விலை அதிகரிப்பால், வியாபாரம் மந்தமாக காணப்பட்டது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ரிஷிவந்தியம் அடுத்த அத்தியூரில் வாரந்தோறும் செவ்வாய் கிழமைகளில் காய்கறி சந்தை நடைபெற்று வருகிறது. இதன் மூலம் அத்தியூர் மட்டுமின்றி அரியலூர், பகண்டை கூட்ரோடு, தொழுவந்தாங்கல், இளையனார்குப்பம் உள்ளிட்ட சுற்றுப்பகுதியில் உள்ள 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 3 மாதங்களில் இல்லாத அளவுக்கு தற்போது காய்கறி விலை உயர்ந்து உள்ளது. நேற்று கூடிய சந்தையில் தக்காளி கிலோ ரூ.50, வெங்காயம் ரூ.40, முருங்கைகாய் ரூ.60, கேரட் ரூ.40, கத்தரிக்காய் ரூ.30க்கும் விற்பனையானது. காய்கறிகள் விலையேற்றத்தால், கட ந்த வாரத்தை விட வியாபாரம் மந்தமாகவே இருந்ததாக வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

**<u>வடிகால் வாய்க்கால் தூர்வாரும் பணி</u>**

**நீடாமங்கலம் :** திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியம் மூவர்கோட்டை அருகில் உள்ள வடவாறு விரிவாக்க கால்வாய் மற்றும் வடவாறு விரிவாக்க வாய்க்கால் ஆகியவற்றின் பிரதான வடிகால்களாகிய கட்டேரி மற்றும் மாலையிட்டான் வடிகால்களின் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியினை தஞ்சாவூர் கீழ்காவிரி வடிநிலக் வட்ட கண்காணிப்பு பொறியாளர் எஸ்.சம்பத் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் தூர்வாரும் பணியினை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். இப்பணியால் செருமங்கலம், காஞ்சிகுடிகாடு, காரிக்கோட்டை, நெடுவாக்கோட்டை, மரவாக்காடு, அத்திக்கோட்டை, ஆலங்கோட்டை ஆகிய கிராமங் கள் பாசன வசதி பெறுகின் றன . ஆய்வின்போது வெண் ணாறு வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் ஆர்.குணசேகரன் உடனிருந்தனர்.

**ஒரு ஏக்கர் பருத்தி சாகுபடியில் 21 குவிண்டால் மகசூல் ஆதிச்சமங்கலம் விவசாயி சாதனை**

வலங்கைமான், : திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலுகாவில் கோடை சாகுபடியாக பல்வேறு கிராமங்களில் 400 ஏக்கருக்கும் மேல் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வல ங்கைமான் பகுதியில் ஒரு ஏக்கருக்கு அதிக பட்சமாக ஆறிலிருந்து 9 குவிண்டால் வரையுமே சராசரி உற்பத்தியாக உள்ளது. இந்நிலையில் ஆதிச்சமங்கலம் ஊராட்சியில் அமரவேல் என்ற விவசாயி ஒரு

ஏக்கரில் கடந்த மாசி பட்டமாக பருத்தி சாகுபடி செய்துள்ளார். இதற்கென விஸ்வநாத், ராசி, துளசி போன்ற ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்துள்ளார். ஒரு ஏக்கர் சாகுபடி செய்வதற்கு உர  நிர்வாகம் தொடர்பாக ரூ.6 ஆயிரமும், பூச்சி நிர்வாகம் தொர்பாக ரூ.4 ஆயிரமும், விதை தொடர்பாக ரூ.3 ஆயிரமும், மண்ணை இயந்திரத்தின் மூலம் கிளறி விடும் பணிக்காக ரூ.2 ஆயிரமும்,  பின்னர் செடிகள் காற்றில் காயாமல் இருக்க மண் அணைப்பதற்கென ரூ. 3 ஆயிரமும், நீர் பாசனம் தொடர்பாக ரூ.3 ஆயிரமும், பருத்தி எடுப்பது உள்ளிட்ட செலவினங்களாக  ரூ.30 ஆயிரமும் செலவு செய்துள்ளார். இவர் 15 ஆண்டுகளாக தொடர்ந்து பருத்தி சாகுபடி செய்து வருகிறார். பருத்தி செடிகள் பழுதின்றி முளைத்ததோடு 8 அடி உயரத்திற்கு மேல் 15க்கும் மேற்பட்ட கிளைகளுடன் நன்கு வளர்ந்தன. அதனை அடுத்து ஒரு செடிக்கு 100 முதல் 140 காய்கள் வரை காய்த்தது. இதன் மூலம் ஒரு ஏக்கரில் இதுவரை 19 குவிண்டால்களுக்கு மேல் பருத்தி மகசூல் பெறப்பட்டது. மேலும் 4  முதல் 5 குவிண்டால்கள் வரை பருத்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே சராசரியாக ஒரு ஏக்கரில் 21 குவிண்டால் வரை பருத்தி மகசூல் செய்துள்ளார். இதன் மூலம் இவருக்கு ஒரு ஏக்கர் சாகுபடி செய்ததில் நிகர லாபம் ரூ.70 ஆயிரம் வரை கிடைத்துள்ளது. இது போன்று பருத்தி சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளை மாவட்ட வேளாண் நிர்வாகம் கண்டறிந்து கவுரவப்படுத்துவதோடு இது போன்ற விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்.